# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை.6

## ஆசிரியர் தகுதித்தேர்வு சான்றிதழ் மறுபிரதி கோருவதற்கான வழிமுறைகள்.

## அறிவிக்கை

சென்னை.6, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் தகுதித்தேர்வு நடத்தப்பட்டு 2012 ஆசிரியர் தகுதிச்சான்றிதழ் ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2013 மற்றும் சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்வு 2014ல் நடைபெற்றதில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் ஆசிரியர் தகுதிச்சான்றிதழ் பதிவிறக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டதன்படி தேர்ச்சி பெற்றவர்கள் இணையதளத்தில் பதிவிறக்கம்செய்துள்ளார்கள்.

.

இந்நிலையில், ஏற்கனவே இணையதளத்தில் வெளியிடப்பட்ட ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யாதவர்கள் தற்போது சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்து வருகிறார்கள். இவர்களுக்கு ஏற்கனவே பதிவிறக்கம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டு, பதிவிறக்கம் செய்யத் தவறியதால் இவர்களுக்கு சான்றிதழின் மறுபிரதி வழங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே, ஆசிரியர் தகுதிச்சான்றிதழ் மறுபிரதி கோருபவர்கள் அளிக்கவேண்டிய விண்ணபத்தின் மாதிரி படிவம் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் இத்துடன் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட விண்ணபத்தினை பூர்த்திசெய்து மறுபிரதிக்கான கட்டணம் ரூ.100/–க்கு Indian Overseas Bank, Indian Bank or Canara Bank ஆகிய வங்கிகளில் ஏதாவது ஒரு வங்கியில் வங்கிவரைவு ( Demand Draft In favour of Teachers Recruitment Board , Chennai.6,Payable at Chennai) பெற்று தேர்வு எழுதிய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க நாடுநர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் பெறப்படும் விண்ணபங்களுக்கு மட்டுமே ஆசிரியர் தேர்வு வாரியத்தில் உள்ள ஆவணங்களுடன் சரிபார்த்து மறுபிரதி (Duplicate) ஆசிரியர் தகுதித் சான்றிதழ்கள் வழங்கப்படும். மறுபிரதி சான்றிதழ்கள் நேரடியாக விண்ணபதாரருக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து பதிவஞ்சலில் அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்.